1981 மார்ச் 27]

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்திற்கு அப்படிப் பெயரை மாற்றினால் எந்த வித எதிர்ப்பும் இருக்காது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா? ஆகவே எதிர்ப்பு இருக்காது என்ற காரணத்தினால் உடனடியாக பேரறிஞர் அண்ணாவினுடைய பெயரால் செங்கை மாவட்டதிற்கு பெயர் இடப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, அரசு அதைப்பற்றி ஆலோசிக்கும்.

திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு பெரும் தலைவர் காமராஜர் .... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இராமநாதபுரம் மாவட்டத்திற்குத் தனிக் கேள்வி போட்டுக் கொள்ளுங்கள். இது செங்கல்பட்டு மாவட்டத்தைப் பற்றிய கேள்வி.

கரூர் இராமானுஜம் நகர் புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு.

*வினா எண். **509—திரு. எம். சின்னசாமி :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம், கரூர் ராமானுஜம் நகரில் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு இடத்தில் அனுமதி இன்றி தனியார்கள் கட்டிடம் கட்டுவது பற்றி அரசுக்கு புகார்கள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) பொதுப்பணித் துறை அலுவலர்களைக் கலந்து, ஆக்கிரமிப்புக்களை அப்புறப்படுத்துவதற்கு கரூர் கோட்டாட்சியர் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவரவர்களே, அந்த இடத்திலே. அதற்குப் பக்கத்தில் உள்ள பங்களாவாசிகள் தான் அந்த இடத்தினை தங்களுக்குச் சொந்தமாக ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தி, அங்கே வீடு இல்லாமல் இருக்கும் குடிசை வாசிகளுக்கு அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புச் செய்திருப்பவர்கள் வசதி படைத்தவர்கள்தான் என்ற தகவல் அரசுக்குக் கிடைத்திருக்கிறது. அவர்களுக்கு லேண்ட் என்க்குரோச்மெண்ட் ஆக்ட் படியாக அவர்களுடைய ஆக்கிரமிப்பை வெளியேற்றம் செய்ய வேண்டியதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. நேற்று 26–3–1981 அன்று கிடைத்த தகவலின்படி, அதிலே ஒருவர் வெளியேறிவிட்டார். மற்றொருவருக்கு அந்த ஆக்டின் 7–வது பிரிவின்படி நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நுண்கலை மேம்பாட்டு நிறுவனங்களுக்கு மானியம்.

* வினா எண் 510—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இலக்கியம், இசை, நடனம், நாடகம், நுண்கலை மேம்பாட்டிற்கு பணியாற்றும் கலை நிறுவனங்களுக்கு மானியம் கொடுக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம், எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) : இத்தகைய கலை நிறுவனங்களுக்கு தமிழ்நாடு அரசு அமைத்துள்ள தன்னாட்சி உரிமையுள்ள நிறுவனங்களான இயல், இசை, நாடக மன்றமும், ஓவிய நுண்கலைக் குழுவும் இயன்ற வரை மானிய உதவி அளித்து வருகின்றன. இயல், இசை, நாடக மன்றமானது புதிய நாடகங்களைத் தயாரித்து அரங்கேற்றம் செய்தல், கலை விழாக்கள், மறைந்த இசை மேதைகளின் நினைவு விழாக்கள் ஆகியவற்றை நடத்துதல் கலைப் பயிற்சி நிலையங்களுக்கு மானியம் வழங்குதல் நலிவடைந்த கிராமிய கலைக் குழுக்களுக்குத் தேவையான இசைக் கருவிகள் வழங்குதல் சிறந்த நூல்களைப் பதிப்பித்து வெளியிடுதல் போன்றவற்றிற்கு மானிய உதவி அளித்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது. ஓவியம் நுண்கலைக் குழுவானது இளம் ஓவியர்களை உருவாக்க உதவித் தொகை அளிப்பதுடன் ஓவியக் கலையை வளர்க்கும் நிறுவனங்களுக்கு கண்காட்சி நடத்தவும், மானியம் வழங்குகிறது. இது தவிர தமிழில் எழுதப்படும் சிறந்த நூல்களை வெளியிட நூலாசிரியர்களுக்கு நிதி உதவும் திட்டத்தின் கீழ் வெளியிட ஆகும் செலவில் 50 சதவீதம் ரூ. 5000-க்கு மேற்போகாமல் நிதி உதவி மானியமாக அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இலக்கிய நூல்களும் அடங்கும்.